OPEN ACCESS

Manuscript ID:
TAM-10042026-10742

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.03.2026

Accepted: 27.03.2026

Published: 01.04.2026

Citation:
Shanthi, P., and T. Thanarasu. "Inner Ethical Norms (Akam Traditions) in Thiruvasagam." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 79-86.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10742

*Corresponding Author:
dharanishgamedev@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Inner Ethical Norms (Akam Traditions) in Thiruvasagam

P. Shanthi
Part-time Ph.D. Research Scholar
Department of Post Graduate Tamil Studies and Research
Government Arts College for Men, Krishnagiri
Affiliated to Periyar University
http://orcid.org/0009-0008-4702-1155

T. Thanarasu
Assistant Professor, Department of Post Graduate Tamil Studies and Research
Government Arts College for Men, Krishnagiri
Affiliated to Periyar University

Abstract

The ethical codes of inner life (Akam) as outlined in Sangam literature — encompassing the role of the female companion (Thozhi), the heroine's lament (Pulambal), and the ten emotional expressions (Meyppadu) — are deeply embedded in devotional literature as well. In Thiruvasagam, composed by Manickavasagar, the classical Akam framework is transposed onto the spiritual realm: Manickavasagar imagines himself as the heroine (Thalaivi) and Lord Siva as the hero (Thalaivan). Throughout Thiruvembavai, the role of the companion (Thozhi) is portrayed across thirty hymns as friends awaken one another for the pre-dawn ritual bath. Manickavasagar beautifully expresses all ten emotional states described by Tholkaappiyam — longing, single-minded contemplation, physical wasting, purposeful action, loss of modesty, seeing everything as the beloved, forgetfulness, infatuation, and thoughts of death — through his devotional verses. This paper examines how the ethical norms of Sangam Akam poetry are interwoven within Thiruvasagam.

Keywords: *Thiruvasagam, Manickavasagar, Akam Traditions, Ethical Norms, Thozhi (Companion), Thalaivi (Heroine), Lament, Meyppadu (Emotional Expressions), Devotional Literature, Saivism.*

References

1. Prof. Sa. Thirugnanasambandam — Tholkaappiyam, Porulathikaram: Text and Commentary, Kalvial Verse 24.
2. Prof. Sa. Thirugnanasambandam — Tholkaappiyam, Porulathikaram: Text and Commentary, Karpial Verse 9.
3. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thiruvembavai, Verse 1.
4. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thiruvembavai, Verse 3.
5. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thirupulambal, Verse 3.
6. Prof. Sa. Thirugnanasambandam — Tholkaappiyam, Porulathikaram: Text and Commentary, Kalvial Verse 9.

7. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Asaippathu, Verse 7.
8. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Sivapuranam, Line 17.
9. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thirucsathagam, Verse 14.
10. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thiruvembavai, Verse 7.
11. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam Explanatory Commentary, Thiruthol Nokkam, Verse 8.

Bibliography

1. Prof. Sa. Thirugnanasambandam — Tholkaappiyam, Porulathikaram: Text and Commentary, Kathir Pathippagam, Thiruvaiyaru.
2. Pulavar Karuppoor Mu. Annamalai — Thiruvasagam: Explanatory Commentary, Kumaran Pathippagam, Thyagaraya Nagar, Chennai – 600 017.

திருவாசகத்தில் அகச்சிந்தனை ஒழுக்கக் கூறுகள்

பொ. சாந்தி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருட்டிணகிரி
பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது

த. தனராசு
நெறியாளர், உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருட்டிணகிரி
பெரியார் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது.

ஆய்வுச் சுருக்கம்
சங்க இலக்கியம் கூறும் அகவாழ்க்கையின் ஒழுக்கக் கூறுகளான தோழியின் பங்கு, தலைவியின் புலம்பல், மெய்ப்பாட்டுணர்வு ஆகியவை பக்தி இலக்கியத்திலும் ஆழமாக இடம்பெற்றுள்ளன. மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில், தலைவி – தலைவன் உறவை மையமாகக் கொண்டு, மாணிக்கவாசகர் தம்மையே தலைவியாகவும் சிவபெருமானைத் தலைவனாகவும் கற்பனை செய்து பாடியுள்ளார். திருவெம்பாவையில் தோழியின் பங்கு முப்பது பாடல்களிலும் பதிவாகியுள்ளது. தலைவி தலைவனை நினைத்துப் புலம்புதல், வேட்கை, ஓருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுதல், நோக்குவன எல்லாம் அவையே போன்று தோன்றுதல், மறத்தல், மயக்கம், சாக்காடு ஆகிய பத்து மெய்ப்பாட்டுணர்வுகளையும் திருவாசகப் பாடல்கள் வழி மாணிக்கவாசகர் வெளிப்படுத்தியுள்ளார். இக்கட்டுரை, அகச்சிந்தனை ஒழுக்கக் கூறுகள் திருவாசகத்தில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்கிறது.

முக்கியச் சொற்கள்: *திருவாசகம், மாணிக்கவாசகர், அகச்சிந்தனை, ஒழுக்கக் கூறுகள், தோழி, தலைவி, புலம்பல், மெய்ப்பாட்டுணர்வு, பக்தி இலக்கியம், சைவம்.*

முன்னுரை

அகப்பாடல்களில் சிறப்பானதாகக் கருதப்படுவது தலைவன் தலைவி காதல் கூற்றுகளாகும். இதனைப் பின் பற்றி பக்தி இலக்கியத்தில் இறைவனை நாயகனாகவும் அடியார்களை நாயகியாகவும் கொண்டு பாடல்கள் பாடப்படுகின்றன. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் நாயகன் நாயகி பாவத்தில் சிவபெருமானை வணங்கியுள்ளார். அதாவது தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி நெஞ்சுருகிப் பாடுவதுபோல் மாணிக்கவாசகர் சிவபெருமான்மீது தீராதக் காதல் கொண்டு பாடிய பாடல்கள் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. அகச்சிந்தனை ஒழுக்கக் கூறுகள் திருவாசகத்தில் எவ்வாறு அமைந்து ள்ளது என்பது குறித்து காண்போம்.

தோழியின் பங்கு

பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும் அகவாழ்க்கையில் தலைவனுக்குத் துணை நிற்பவனை பாங்கன் என்றும், தலைவிக்குத் துணை நிற்பவளை தோழி என்றும் குறிப்பிடுகின்றன. தலைவன் தலைவியிடத்து செய்தியைக் கடத்தும் ஒரு அகக்கருவியாகச் செயல்படுபவள் தோழி. தோழியானவள் தலைவி, தலைவன் செவிலித்தாயிடத்து கூற்று நிகழ்த்துவாள். தோழியைச் சங்க இலக்கியங்கள் பாங்கி என்றழைக்கின்றன. தலைவியிடம் மிகவும் நெருங்கிப் பழகுபவள் தோழி. அனைத்திற்கும் உறுதுணையாக இருப்பவள். தோழி மனது வைத்தால்தான் தலைவன் தலைவியை அடையமுடியும். இதனை உணர்ந்த

தலைவன் தோழியை இரந்து பின்னின்று தோழியின் வாயிலாகத் தலைவியைக் கூடுவான். களவிலும், கற்பிலும் தலைவன் தலைவியருக்கு உற்ற துணையாக விளங்குபவள் தோழி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

களவு வாழ்க்கை என்பது திருமணத்திற்கு முன்னர் வாழும் வாழ்க்கை முறையாகும். இதில் தோழியின் பங்கு 32 வகை எனத் தொல்காப்பியம் களவியலில் தொகுத்துக் காட்டுகிறது.

"நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
- -
பாங்குற வந்த நாலெட்டு வகையினும்
தாங்கருஞ் சிறப்பின் தோழி மேனசு[1]

என்று களவில் தோழியின் கூற்றுகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். கற்பு வாழ்க்கைஎன்பதுதிருமணத்திற்குப்பின்னர் வாழும் தலைவன் தலைவியரின் வாழ்க்கை முறையாகும். இதில் தோழியின் பங்குக் குறித்துத் தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பெறற்குஅரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த
தெறற்குஅரு மரபின் சிறப்பின் கண்ணும்
அற்றம்அழிவு உரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்
- -
பிரியும் காலம் எதிர் நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக்கு உரிய என்மனார் புலவர்"[2].

எனத் தோழியால் மணவினை கைகூடியது எனத் தலைவன் தோழியைப் பாராட்டுவது தொடங்கி தலைவன் தலைவியைப் பிரியுமிடத்துத் தலைவிக்குப் பிரிவாற் ஆறுதல் கூறுவது வரை தோழியின் பங்கு நிலவுகிறது. இதில் 19 நிலைகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர் இயற்றிய திருவெம் பாவையில் இருபது பாடல்களுமே தோழிக் கூற்றுப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. அதாவது இறைவனை வேண்டி மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழும் கன்னிப் பெண்கள் தன் தோழிகளை எழுப்புவதாகப் பாடப்பட்டுள்ளது. அப்பாடலில் இறைவனின் பெருமைகளைப் பாடித் தோழிகளைத் துயில் எழுப்புகின்றனர்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்
வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ
நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி
மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும்
புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே
என்னே
ஈதேளம் தோழி பரிசேலோர் எம்பாவாய்![3]

எனும்பாடல்வழி,மார்கழிநீராடச்செல்லும் பெண்கள் தோழி ஒருத்தியை அழைத்துச் செல்வதற்காக அவளது வீட்டிற்கு வருகின்றனர். அவளோ நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறாள். இதைக் கண்டதும் அழைத்துச்செல்லவந்தபெண்களில்ஒருத்தி, வாள்போன்ற கண்களை உடையவளே! திருவண்ணாமலையில் கோயில் கொண்டுள்ள நம் இறைவன் முதலும் முடிவும் இல்லாதவன், அநாதியாய் விளங்குபவன் அரிய பெருஞ்சோதியும் ஆவான். அத்தகையவனை, உனது வாசலில் நின்ற படியே நாங்கள் புகழ்ந்து பாடுகிறோம்.

ஆயினும், நீ எழவே இல்லை. எங்கள் பாடலின் இனிமையினைக் கேட்டே நீ உறங்குகின்றாயோ? உனது செவிகள் இரண்டும் வலிய இரும்பினால் ஆனவையோ?" என்று கேட்டதும், அவள் எழுந்துவிட்டாள். பின்னர்த் தானும் அவர்களோடு சேர்ந்து கொண்டாள்.

இதில் ஐந்து அகவை முதல் பன்னிரண்டு அகவை வரையுள்ள கன்னிப்பெண்கள் எட்டு வகையினரும் முறையே ஒருவரை யொருவர் துயிலெழுப்பித் தாயுடன் சென்று பொய்கை நீராடிப் பாவை நோன்பு நோற்கும் பண்டையத் தமிழர் வழக்கு கூறப்பட்டுள்ளது. இதில் பார்வதி தேவியே எம்பாவாய்! என அழைக்கப்படுகிறாள்.

'முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!'[4]

முத்துப் போன்ற வெண்மையான பற்களையுடைய பெண்ணே, முற்காலத்தில் எங்களுக்கு முன் விழித்தெழுந்து வந்து, என் தந்தை இன்பவடிவானவன், அழிவில்லாதவன் என்று வாயூறி இனிக்கப் பேசுவாய். இப்பொழுது ஏன் எழுந்து வந்து உன் படுக்கை அறையின் கதவையும் திறக்காமல் இருக்கின்றாய் என்று எழுப்பவந்த மற்ற பெண்கள் கேட்க, தோழி எழுந்து வந்து, பேரன்புடைய என் தோழமை உடையவர்களே! புதிய அடிமையாகிய என் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்கிறாள். அதற்குவந்த தோழியர், உன்னுடைய அன்பு நாங்கள் அறிந்ததே! முன் நன்மையுடைவர்கள் சிவனின் பெருமைகளைப் புகழ்ந்து பாடாமல் இருப்பார்களோ! உன்னை எழுப்ப வந்த எங்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று நகைச்சுவையாய்க் கூறுகின்றனர். இப்பாடலில் தோழியரின் நட்பு விளக்கப்படுகிறது. தோழியின் முக்கியத்துவம் அறியப்படுகிறது. தோழியின் பங்கை இப்பாடல் மூலம் தெளிவு படுத்துகிறார் மாணிக்கவாசகர்.

தலைவியின் புலம்பல்

தலைவி தலைவனை நினைத்து வருந்தி, தானே பேசிக் கொள்வதும், அரற்றுவதும் 'புலம்பல்' எனப்படுகிறது. தலைவி தலைவனின் பிரிவை ஆற்றாது புலம்புவதும், அரற்றுவதும் தன்னைத்தானே நோவதும் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. அதே போல் மாணிக்கவாசகர் தன்னைத் தலைவியாகப் பாவித்து சிவனைத் தலைவனாகப் பாவித்து அவன் தன்னை விட்டுப் பிரிந்து உள்ளதை நினைத்துப் புலம்பிப் பாடியுள்ளார். திருப்புலம்பலில் உள்ள மூன்று பாடல்களிலும் இறைவனை நினைத்துப் புலம்பியுள்ளார்.

'உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா
உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்து உருக வேண்டுவனே!'[5]

எனும் பாடல்வழி, உலகியல் முறையில் உள்ள உறவினரையும், ஊரில் உள்ளோரையும் நான் விரும்பவில்லை. வெறும் கல்வி கற்று இறைவனை வணங்காதவரையும் நான் விரும்பமாட்டேன். இன்பம் மிக்கவனே

உன்னுடைய ஒலிக்கும் ஆண்மைக்கழல் அணிந்த திருவடியைக் கன்றைப் பிரிந்த கறவை ஆவினங்கள் போன்று உள்ளமுருகிக் கசிந்து நிற்க வேண்டுவேன் என்று பலவாறு இறைவனை உயர்த்தியும், தாழ்த்தியும் இறைவன் மீதுள்ள காதலால் புலம்புகிறார்.

தலைவன்தலைவியின்மெய்ப்பாட்டுணர்வு

தலைவி மேல் காதல் கொண்ட தலைவன் போல் மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது காதல் கொண்டு தீயில் பாயவும், ஆசையுடையோர் மேல் மயக்கம் கொண்டும் மண்ணில் விழுந்து புரண்டும், தலைவனே! தலைவனே! என்று சொல்லி அழுது ஆர்ப்பரித்தும் உன்னைப் பிரிய முடியாது என்று தன்நிலைக் கூறி அரற்றினார். இது காதல் கொண்ட தலைவனின் செயல் போல் உள்ளது. இந்நிலையைத் தொல்காப்பியர் பத்து வகையாகக் கூறியுள்ளார்.

‘வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஇச்
சிறப்புடை மரபின் அவை களவு என
மொழிபசு[6]

என்னும் பாடல்வழி, குறையாத விருப்பத்தினை உடையவளாக இருத்தல், எப்போதும் நினைத்தல், உடல் மெலிவு காணல், ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுதல், அதிகமான காதல் உணர்வின் காரணமாக நாணத்தின் எல்லையைக் கடத்தல், பார்ப்பன எல்லாம் அவையே போலத் தோன்றுதல், மறதி, மயக்கம், உயிரை விட்டுவிடும் எண்ணம் தோன்றுதல் ஆகிய பத்தும் களவொழுக்க காலத்தில் நிகழும் என்கிறார் தொல்காப்பியர். இது போன்ற நிலைகளில் தலைவியின் பால் காதல் கொண்டு தலைவன் இருப்பதைப் போல் அதே நிலையில் தானும் உள்ளதாக மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

1. வேட்கை: ஒருவரை ஒருவர் பெறவேண்டும் என்ற விளைவு

“பாரோர் விண்ணோர் பரவி
ஏத்தும் பரனே பரஞ்ஜோதீ
வுடராய் வாரா உலகம்
தந்து வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித்
திரிந் தெம்பெருமான்என ஏத்த
ஆரா அமுதே ஆசைப
பட்டேன் கண்டாய் அம்மானே!”[7]

எம்பெருமான் என்று உன்னை மனதில் ஏத்த ஆசைப்படுகிறேன் என்று வேட்கை யுறுதலைப் பற்றி மாணிக்கவாசகர் பாடியுள்ளார். மேலும்,

2. ஒருதலை உள்ளுதல்: இடைவிடாது நினைத்தல்.

சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய
உரைப்பன்யான்![8]

என்று சிவனை மனதில் இடைவிடாது நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்கிறார். இது ஒருதலையுள்ளுதல் எனும் மெய்ப்பாட் டுணர்வினை வெளிப்படுத்துகிறது.

3. மெலிதல்: இடைவிடாது நினைத்து உண்ணாமையால் வரும் மெலிவு.

‘ஆமாறுன் திருவடிக்கே
அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்து
ரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்
மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே
சார்வானே![9]

உனது திருவடிக்கே அடிமையாகும் வண்ணம் மனம் நெகிழ்ந்து உருகினேன் இல்லை.அன்புசெய்தேன்இல்லை.பூமாலை சூடி வழிபட்டேன் இல்லை. உனது பெருமைகளைப் பாடி புகழ்ந்துரைத்தேன்

இல்லை. சதரப்பாட்டினால் சேரும் அறிவானவனே! ஒவ்வொரு நாளும் நான் சாவதற்கே ஓடுகிறேன் என்று மெலிதல் எனும் மெய்ப்பாட்டுணர்வினை வெளி படுத்துகிறார்.

4. ஆக்கம் செப்பல்: உறங்காமை உறுவ ஓதல் முதலாயின கூறுதல்.

தென்னாஎன் னாமுன்னம் தீசேர்
மெழுகொப்பாய்
என்னானை என்னரையன்
இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்
இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா
கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர்
எம்பாவாய்![10]

முன்பு தென்பாண்டி நாட்டானே! எனச் சொன்னாலே போதும். தீயினில் விழுந்த மெழுகுபோல உருகுவாய், இவை எல்லாம் முன்பு. தற்போது இப்படி இல்லை என்று மனம் கொண்ட அறிவிலார் நிலைபோல் வாளாப் படுத்துள்ளாள் எனும் மெய்ப் பாட்டுணர்வினை வெளிபடுத்துகிறார்.

5. நாணுவரை இறத்தல்: நாணம் நீங்குதல்

மானம் அழிந்தோம் மதிமறந்தோம்
மங்கைநல்லீர்
வானம் தொழும்தென்னன் வாழ்கழலே
நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம்
அவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ
தோணோக்கம்![11]

என மானம் அழிந்து அறிவிழந்து கிடக்கின்றேன்என்கிறார். இதில்நாணுவரை இறத்தல் எனும் மெய்ப் பாட்டுணர்வினைப் பாடியுள்ளார். தொல்காப்பியர் பயன்படுத்திய மெய்ப்பாட்டு உணர்வினை மாணிக்கவாசகர் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளமை தெற்றென விளங்குகிறது.

முடிவுரை

பண்டைய இலக்கியங்கள் குறிப்பிடும் தலைவன் தலைவியரின் அக ஒழுக்கக் கூறுகள் எவ்வாறு பக்தி இலக்கியத்தில் அடியார்களால் கையாளப்பட்டது என்பது குறித்தும், அதில் தலைவன் தலைவியை ஒருங்கிணைக்க தோழியின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்தும், தலைவன் தலைவியரின் மெய்ப்பாட்டு உணர்விற்கு ஏற்றார்போல் மாணிக்கவாசகர் தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் பாவித்து பாடிய பாடல்கள் திருவாசகத்தில் எவ்வாறு அமைந்துள்ளன என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சான்றெண் விளக்கம்

1. ச.திருஞானசம்பந்தம் - தொல்காப்பியம். பொருளதிகாரம் மூலமும் உரையும் களவியல் நூற். 24
2. ச.திருஞானசம்மந்தம் - தொல்காப்பியம். பொருளதிகாரம் மூலமும் உரையும் கற்பியல் நூற்.9
3. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திவெம்பாவை பா.1
4. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திருவெம்பாவை பா.3
5. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திருப்புலம்பல் பா.3
6. ச.திருஞானசம்பந்தம் - தொல்காப்பியம். பொருளதிகாரம் மூலமும் உரையும் களவியல் நூ.9
7. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, ஆசைப்பத்து பா.7
8. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, சிவபுராணம் அடி.17
9. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திருச்சதகம் பா.14
10. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திருவெம்பாவை பா.7

11. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, திருத்தோணோக்கம் பா.8

துணைநூற் பட்டியல்

1. ச. திருஞானசம்மந்தம் - தொல்காப்பியம். பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு.
2. கருப்பூர் மு. அண்ணாமலை, திருவாசகம் தெளிவுரை, குமரன் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை.